1993 மார்ச் 30]

179—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வீர சைவர் எனும் தமிழ் பண்டாரங்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*9358—திரு. இரா. அப்பு நடேசன், திரு. கு. லாரன்ஸ், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, திரு. ஆ. பாலையா, டாக்டர் எம். மோசஸ், திரு. எம். ஆண்டி அம்பலம், திரு. மா. சுந்தர தாஸ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வீர சைவர் என்று அரசு ஆவணங்களில் குறிப்பிடும் தமிழ்ப் பண்டாரங்கள் கல்வியிலும், சமூக அந்தஸ்திலும், பொருளாதார நிலையிலும் மிகவும் பின் தங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைக்குமாறு கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வீரசைவர் என்று அரசு ஆவணங்களில் குறிப்பிடப்படும் தமிழ்ப் பண்டாரங்கள் என்ற சமுதாய மக்கள் கல்வியிலும் சமூக அந்தஸ்திலும், பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கியிருப்பதாக தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

(ஆ) இவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு கோரிக்கை அரசுக்கு வந்தது.

(இ) ஆய்வுக்குப் பின்னர் இக்கோரிக்கையினை தற்போது ஏற்க இயலாது என்று அரசு முடிவு செய்தது.

முற்பகல் 10-50

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கேரளாவில் இருக்கும் போது இந்தச் சமுதாயத்தை ஒரு மிக இழிவான நிலையில் வைத்திருந்தார்கள். எனவே, அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்

கள், வீர சைவர் என்று பெயர் போட்டு, தங்களுடைய இழிவைப் போக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், உண்மையிலேயே அவர்கள் கோவில்களில் பூ கட்டுகிற தொழிலைச் செய்கிறார்கள். அவர்களுக்கு நிலம்கூட கிடையாது. விவசாயம் செய்வதற்குக் கூட நிலம் இல்லை; அவர்களிலே படித்தவர்கள் இல்லை; வணிகர்கள் இல்லை; பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் இல்லை; சமூக பொருளாதார நிலையிலும் இவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே, பல்வேறு தமிழ்ச் சமுதாயங்களைக் கைதூக்கிவிடும் இந்த அரசு, தமிழ்ப் பண்டாரங்களைக் கைதூக்கி விடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969-லே முதலாவது பிற்பட்டோர் நலக்குழு அமைக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. சட்டநாதன் அப்போது இருந்தார். அதன்பிறகு, 1982-லே திரு. அம்பாசங்கர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு கொடுத்த பரிந்துரையின் பேரிலே, இந்தச் சமூகம் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை. ஆனால், இதுபோன்ற பிரச்சினைகள் கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகத்தான், இன்றைக்கு 70 சதவிகித மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்குமுகத்தான் பிற்பட்டோர் நலனிலே மிகுந்த அக்கறை கொண்டு, இன்றைக்கு அவர்களுடைய காவலராகத் திகழ்ந்து வருகிற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒரு நிரந்தர ஆணையத்தினை ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இந்த நிரந்தர ஆணையம் அளிக்கும் பரிந்துரையின் பேரிலே அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள வீர சைவர் என்னும் தமிழ்ப் பண்டாரங்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். மற்ற மாவட்டங்களில் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். எனவே, குமரி மாவட்டத்திலுள்ள வீர சைவர் என்னும் தமிழ்ப் பண்டாரங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுடைய தரத்தை முன்னேற்ற அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற முரண்பாடுகளைக் களைவதற்காகத்தான் இன்றைக்கு நிரந்தர ஆணையத்தினை நம

1993 மார்ச் 30]

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ஆணையத்தின்முன் அவர்கள் அங்கு சென்று, நிலைமைகளை விளக்கி, அதன்பின் அந்த ஆணையம் அளிக்கும் பரிந்துரையின்பேரிலே அரசு முடிவு செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 180, திரு. ம. தனபால், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

180—

திருப்போரூர் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைத்தல்.

*10434—திரு. ம. தனபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் தொகுதியில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தன்னிகரில்லாத் தலைவி எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திலே நிறைய தொழிற்சாலைகளை உருவாக்கி, இன்றைக்கு எவ்வளவோ ஏழைகள் மற்றும் வாடிக்கொண்டிருந்த வர்க்கத்தை எல்லாம் முன்னேற்ற அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து ஒரு சாதனை படைத்துக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில் என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருப்போரூர் பகுதியில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கரா நிலப்பரப்பில், முந்திரித் தோப்புகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல நிறைய மகசூல் இருக்கிறது. இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலையை உருவாக்கினால் ஒருபுறத்திலே பார்க்கிறபோது, இந்த அரசுக்கு நிறைய லாபம் இருக்கும்;